?????????????? ??????? ???? ????? ?????????????????????? ????????? ????!

மாகாணங்களுக்கு இடையில் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் நாளை (புதன்கிழமை) முதல் பேருந்து சேவை முன்னெடுக்கப்படவுள்ளது.

போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம இந்த விடயத்தினைத் தெரிவித்துள்ளார்.

இதற்கு கொரோனா ஒழிப்பு தேசிய செயலணியின் அனுமதி கிடைத்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

?????????????? ??????? 107 ???? ????????? ?????? ??????????? ??????????

யாழ்ப்பாணத்தில் கொரோனா வைரஸ் தொற்றினால் இதுவரை 107 பேர் உயிரிழந்துள்ளதாக மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும் யாழ்ப்பாணத்தில் கொரோனா வைரஸ் தொற்றினால் இதுவரை 6ஆயிரத்து 15பேர்

பாதிக்கப்பட்டுள்ளதாகவும் கணபதிப்பிள்ளை மகேசன் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை 3 ஆயிரத்து 604 குடும்பங்களை சேர்ந்த 10 ஆயிரத்து 603 பேர், சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

??????? ????????? ???????????? ???????????????? ???? ???????????????????????!

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பினை ஊக்குவித்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் கட்டாரிலிருந்து நாடு கடத்தப்பட்ட ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

41 வயதான ஒருவரே நேற்று(திங்கட்கிழமை) புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த நபர் 14 நாட்கள் முள்ளியவளை தனிமைப்படுத்தல் மத்திய நிலையத்தில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த நிலையில் கைது செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

இந்தநிலையில் கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபரிடம் தொடர்ந்தும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.